முருகப்பெருமான் துணை

**மகான் ஔவையார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.05.2023, வெள்ளிக்கிழமை

1. யோகராஜனே அரங்கா போற்றி
   உலகை காக்க அவதாரமாக
   யோக ஞான தரும வழிகளாக
   உயர்ஞானியாக வந்த குருவே
2. குருவே ஞான தேசிகனே
   குறைவிலா உன்பெருமை கூறி
   அருளுவேன் அறிவுரை ஆசி
   அகிலமதில் ஔவையார் யானும்
3. யானும் சோபகிருது தகர்திங்கள்
   இருபான்நவ திகதி புகர்வாரம்
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 29ம் நாள், 12.05.2023, வெள்ளிக்கிழமை)
   ஞானவான்கள் உலகினில் நிரம்ப
   ஞானதேசிகன் கொள்கைதனை உரைப்பேன்
4. உரைக்கவே கலியிடர்களான
   உயிர்கொலை செய்யா தவிர்த்து
   கரைபடியா மாந்தர்களாக
   கருணை வடிவாக மாற
5. மாறவே அரங்கன் தரும்
   மாண்புள்ள சைவ நெறி
   அறமாகத் தரும் அன்னதான
   ஆற்றல்மிக்க தொண்டுடன் கூடிய
6. கூடியே ஜீவத் தயவு நெறி
   கூறிடுவேன் மக்கள் ஏற்று
   நாடியே சரணாகதி கொண்டு
   ஞானியரின் திருபாதம் பணிந்துவர
7. வருகவே நற்குணவான்களாக
   வள்ளல் தன்மை குறையா
   தருமவான்களாகத் தேறியே
   தரணியை காக்கும் சக்திமிகு

8. சக்திமிகு அரங்கன் படைகளாக
சரவணசோதி வழி தரிசணம்
சக்திமிகு ஆறுமுகனாரை கண்டு
சகலரும் ஞானவான்களாவர்

9. அவனியில் அரங்கன் தேடிடும்
ஆற்றல் மிக்க ஞானிகளாக
அவதார நிலைகள் அடைந்து
அகிலமெங்கும் ஞானிகள் நிரம்ப

10. நிரம்பவே அற்புதம் படைப்பர்
நீதிநெறி குன்றா வண்ணம்
வரம்பல பெற்ற மக்கள்
வல்லமைபட உலகை ஆளும்

11. ஆளும் காலமாக மாறி
அறிவிப்பேன் ஞான ஆட்சி
ஆளுமைதனை உலகினில் படைப்பர்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—